**உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் பொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்ளும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட கைத்தொலைபேசி செயலி மென்பொருளின் ரூபா 2,437,425 பெறுமதி எல்கேஎஸ் 01 இன் பிரகாரம் அருவச் சொத்துக்கள் என வகைப்படுத்தாமல் நிதி நிலைமைக் கூற்றில் கணனி வன்பொருளின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் கணக்குகளில் உரிய பிழைகள் சீர்செய்யப்படும். | கணக்கீட்டு நியமங்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்டவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏல்கேஏஸ் 07 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்காததால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான காசு உட்பாய்ச்சல் ரூபா 226,560,800 ஆல் குறைத்துக் காட்டப்பட்டது, முதலீட்டு நடவடிக்கைகளின் கீழான காசுப்பாய்ச்சல் ரூபா 130,126,748 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டதுடன், நிதி நடவடிக்கைகளின் கீழான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 96,425,733 ஆல் குறைத்துக் காட்டப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | எஸ்எல்எவ்ஆர்எஸ் 09 இன் பிரகாரம் நட்டக்கழிவு ஏற்பாட்டை கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட கடன் மீதிகளுக்கும் 2021 மற்றும் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 2022 இல் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடன் மீதிகளுக்கும் இடையே ரூபா 196,097,689 மற்றும் ரூபா 227,896,243 வேறுபாடுகள் இருந்ததால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கணிப்பிடப்பட்ட முறையே ரூபா 230,284,678 நட்டக்கழிவு ஆதாயம் மற்றும் ரூபா 761,798,206 நட்டக்கழிவு இழப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய மீளக்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்களின் சரியான தன்மையை கணக்காய்வால் உறுதிப்படுத்த முடியவில்லை. | | |
| (ஈ) | எல்கேஏஎஸ் 24 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் முக்கிய முகாமைத்துவ பணியாளர் இழப்பீடு வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் முன்னாள் பதிற்கடமை பணிப்பாளருக்கும் தற்போதைய பணிப்பாளருக்கும் செலுத்தப்பட்ட ரூபா 1,179,488 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. எல்கேஏஎஸ் 24 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | நட்டக்கழிவு இழப்பு ஏற்பட்டுள்ளதைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் புறநிலை சான்று எஸ்எல்எவ்ஆர்எஸ் 07 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் அத்தகைய வெளிப்படுத்தல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது எஸ்எல்எவ்ஆர்எஸ் 07 இன் பிரகாரம் நட்டக்கழிவு இழப்பு எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஊ) | ரூபா 76,582,323 தொகையான பெறவேண்டிய வட்டி எஸ்எல்எவ்ஆர்எஸ் 09 இன் பிரகாரம் காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் சேர்க்கப்படாமல் ஏனைய சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. பிழை 2024 இல் சீர்செய்யப்படும். | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தொங்கல் கணக்குகளில் நான்கு வட்டி மீதிகளில் ரூபா 59,718,232 கழிப்பனவு மற்றும் தொங்கல் கணக்குகளில் இரண்டு வட்டி மீதிகளில் ரூபா 1,607,963 அதிகரிப்பு மற்றும் திரட்டிய நிதியத்திற்கான தேறிய விளைவின் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அந்த சீராக்கங்களிற்கான தொடர்புடைய சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இணங்கப்பட்டது. | அனைத்து சீராக்கங்களுக்கான விளக்கங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிலையான வைப்பு வட்டி வருமானத்தை அதிகரித்துக் குறிப்பிடும் முன்னைய ஆண்டு பிழையை சீர்செய்யத் தவறியதன் காரணமாக மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி ரூபா 14,015,293 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டது. அடுத்த ஆண்டு முதல் சரியான வருமானம் கணக்கீடு செய்யப்படும். | கணக்கீடு சரியாக செய்யப்பட வேண்டும். |
| (இ) | கணக்காய்வின் கணிப்பீடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருமான வரிச் செலவினம் ரூபா 51,270,726 ஆக இருந்த போதிலும் இது விரிவான வருமான கூற்றில் ரூபா 36,688,054 ஆகக் காட்டப்பட்டது. அதன் பிரகாரம் வருமான வரிச் செலவினம் ரூபா 14,582,672 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டது. | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டில் முதலீட்டு வருமானத்தின் மீது செலுத்தப்பட்ட முற்பண வருமான வரி ரூபா 7,021,065 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 2,190,461 முன்னைய ஆண்டிற்கான வருமான வரியை செலுத்தும் போது கழிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 4,830,604 மிகுதி தொகை ஏனைய சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் ஏனைய சொத்துக்களின் தொகை ரூபா 4,830,604 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இணங்கப்பட்டது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கணக்காய்வின் கணிப்பீடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு ரூபா 326,265 ஆக இருந்த போதிலும் ரூபா 7,881,953 பிற்போடப்பட்ட வரிச் சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 7,530,191 ஆக கணக்கீடு செய்யப்பட வேண்டிய பிற்போடப்பட்ட வரிச் செலவினம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 25,496 பிற்போடப்பட்ட வரி வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டது. | -மேற்படி- |
| (ஊ) | ஆண்டின் போது ரூபா 7,736,650 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி வன்பொருள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 1,407,877 ஆக இருந்த போதிலும் அது ரூபா 4,004,699 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 5,412,576 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டது. இது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீர்செய்யப்படும். | -மேற்படி- |
| (எ) | கணக்காய்வின் கணிப்பீடுகளின் பிரகாரம் மானியங்களிலிருந்து பெறப்பட்ட சொத்துக்களுக்கான மானிய காலக்கழிவு வருமானம் ரூபா 2,397,639 ஆக இருந்த போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,397,057 ஆக காட்டப்பட்டிருந்ததால் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 3,999,418 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இணங்கப்பட்டது. | -மேற்படி- |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | தொங்கல் கணக்குகளில் உள்ள மூலதன மீதி மற்றும் வட்டி தொகை | 1,472,085,856 | 1,444,252,401 | 27,833,455 | இணங்கப்பட்டது. தற்போது வேறுபாடு சீர்செய்யப்பட்டு வருகிறது. | பேரேட்டுக் கணக்குகள் மற்றும் பட்டியல் மீதிகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் | 443,986,105 (நிறுவனத்தின் பிரகாரம்) | 251,435,722 (உள்ளூராட்சி அதிகாரசபைகளில் உள்ள கணக்குகளின் பிரகாரம்) | 192,550,383 | மறுசீரமைப்பின் போது நிலுவை வட்டியை பின்னர் அறவிடுவதன் அடிப்படையில் கடன் தொகை தொடர்பான தவணைப்பணம் மற்றும் வட்டியை அறவிடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. இந்த வட்டித் தொகை எமது தொங்கல் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | மீதிகளில் உள்ள முரண்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கு உள்ளூராட்சி சபைகளுடன் முறையான ஒருங்கிணைப்பு செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 பொருத்தமற்ற மதிப்பீடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நட்டக்கழிவை கணிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளின் பெறுமதி வயதுப் பகுப்பாய்வு கூற்றில் உள்ள மீதிகளை விட ரூபா 770,172,169 ஆல் அதிகமாக இருந்தது. எனவே ரூபா 167,561,679 தொகையான நட்டக்கழிவு இழப்பின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்படும் மீதிகள், பட்டியல் மீதிகள் மற்றும் நட்டக்கழிவிற்காக பயன்படுத்தப்படும் மீதிகள் ஒன்றுக்கொன்று வேறுபடக்கூடாது. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 670,289,991 தொகையான செயற்பாடற்ற கடன் மீதி 01 ஆண்டு முதல் 34 ஆண்டுகள் வரை நிலுவையாக இருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | கடன் அறவீடு துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி சபைகளின் கடன் மீதிகள் ஆண்டின் இறுதியில் உறுதிப்படுத்தப்படும் என கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 58,788,239 | மீதி சரிபார்ப்புக்காக 194 சபைகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டது, அதில் 178 சபைகள் மீதிகளை உறுதிப்படுத்தியுள்ளன. 16 சபைகளின் மீதி உறுதிப்படுத்தப்படவில்லை. | அனைத்து மீதிகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

தொகையான 16 மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 57,579,949 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீளக்குறிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 528,948,635 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 586,528,584 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நட்டக்கழிவு இழப்பு ரூபா 594,236,527 ஆல் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டு வருமானம் ரூபா 22,263,529 ஆல் அதிகரித்தமை என்பன இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 250 மில்லியன் பெறுமதியான புதிய கடன்களை அங்கீகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 07 செயற்திட்டங்களுக்காக ரூபா 134.4 மில்லியன் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், முன்னேற்றம் 53.76 சதவீதமாகும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | திட்டமிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உண்மைக்கு ஏற்ப திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 750 மில்லியனை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் ரூபா 388.96 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், கடன் வழங்கல் முன்னேற்றம் 51.8 சதவீதமாக இருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | 2017 முதல் 2023 வரை நிலுவையாக உள்ள ரூபா 3.5 மில்லியன் தொகையான முற்பணக் கணக்கு மீதிகள் மீளாய்வாண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நிலுவையாக உள்ள முற்பணக் கணக்கு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 03 தொகுதிகளை உள்ளடக்கிய கணனி மென்பொருளை நிறுவுவதற்கு ரூபா 2,938,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் 2020 ஆம் ஆண்டு முதல் 03 வருடங்களுக்கு வருடாந்த பராமரிப்புக் கட்டணமாக ரூபா 1,762,800 செலுத்தப்பட்டுள்ளது. எனினும், கடன் முகாமைத்துவ தொகுதி தவிர, நிதி முகாமைத்துவ தொகுதி மற்றும் பொதுவான தொகுதி பயன்பாட்டில் காணப்படவில்லை. | தற்போது கணனி முறைமையில் குறைபாடு உள்ளதால், புதிய கணனி முறைமையை கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டு, அந்த குழுவால் தற்போது கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | கணனி முறைமையின் குறித்துரைத்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |